ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk
ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் சந்தைத் தொழிற்பாடுகள் திணைக்களம்

திகதி 2026 சனவரி 30

# சந்தைத் தொழிற்பாடுகள் அறிக்கை - 2025 திசெம்பர் வெளியீட்டை இலங்கை மத்திய வங்கி வெளியிடுகின்றது

இலங்கை மத்திய வங்கி அதன் பிந்திய சந்தைத் தொழிற்பாடுகள் அறிக்கையினை 2026 சனவரி 30 அன்று வெளியிட்டது. நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீத வீழ்ச்சியினால் ஆதரவளிக்கப்படும் நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழ் நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தலினை அனுசரித்து மத்திய வங்கியினால் மேற்கொண்ட நாணய மற்றும் வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள் பற்றிய ஆர்வலர் புரிந்துகொள்ளலை மேம்படுத்துவதனை சந்தைத் தொழிற்பாடுகள் அறிக்கை நோக்காகக் கொள்கின்றது.

பிந்திய சந்தைத் தொழிற்பாடுகள் அறிக்கையானது மத்திய வங்கியின் கொள்கை நிலை, திரவத்தன்மை நிலைமைகள், குறுங்கால வட்டி வீதம், செலாவணி வீத அபிவிருத்திகள், அதேபோன்று பணச் சந்தை மற்றும் இலங்கை மத்திய வங்கியின் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை தொழிற்பாடுகள் என்பன பற்றி 2025ஆம் ஆண்டின் இரண்டாமரையாண்டின் மீது குறிப்பான கவனம் செலுத்தி பொதுநோக்கொன்றை வழங்குகின்றது. சந்தைத் தொழிற்பாடுகள் அறிக்கை காலத்திற்குகந்த தலைப்புகளில் இரு சிறப்புக் கட்டுரைகளையும் எடுத்துரைப்பதுடன் சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய தெரிவுசெய்யப்பட்ட குறிகாட்டிகளையும் உள்ளடக்குகின்றது.

**முக்கிய சிறப்புக்கூறுகள்:**

- உள்நாட்டு நாணயச் சந்தையின் திரவத்தன்மை 2025 முழுவதும் மிகையான மட்டங்களில் நிலையாகப் பேணப்பட்டது.
- விடாப்பிடியான மிகையான திரவத்தன்மை நிலைமைகளின் நோக்கில் மேலதிகத் திரவத்தன்மையினை உட்செலுத்துவதை நோக்கி 2025 சனவரி இறுதி தொடக்கம் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளூடாக உள்நாட்டுப் பணச் சந்தையில் மத்திய வங்கி தலையிடவில்லை.
- சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் 2025 முதலரைப்பகுதியில் ஓரிரவு கொள்கை வீதத்துடன் பரந்தளவில் அணிசேர்ந்து காணப்பட்டதாயினும் திரவத்தன்மைச் செறிவு காரணமாக யூலை ஆரம்பத்திலிருந்து விலகிச்சென்றது. எனினும், சராசரி நிறையேற்றப்பட்ட 2026 சனவரியில் ஓரிரவு கொள்கை வீதத்துடன் மீள அணிசேர்ந்தது.
- இலங்கை ரூபா ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக மிதமாகத் தேய்வடைந்து உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் கேள்வி மற்றும் நிரம்பல் நிலைமைகளைப் பிரதிபலித்தது.
- வெளிநாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்கு மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தலையிட்டதுடன் வேண்டப்பட்ட போது செலாவணி வீதத்தில் அளவுக்கு மீறிய தளம்பலைக் கட்டுப்படுத்துவதற்கும் தலையிட்டது.
- ஆண்டுகாலப்பகுதியில் மத்திய வங்கியின் ஐ.அ.டொலர் 2.0 பில்லியன் கொண்ட மொத்த தேறிய கொள்வனவுகள் (பெறுமதித் திகதி அடிப்படையில்) மொத்த அலுவல்சார் ஒதுக்குகளுக்குப் பங்களித்து 2025 இறுதியளவில் ஐ.அ.டொலர் 6.8 பில்லியனை எட்டியது. இது, நெருக்கடியின் பின்னர் பதிவாகிய அதிகூடிய மட்டமாகும்.
- சந்தை நடவடிக்கைகளில் மேம்படுதல் மூலம் வங்கிகளுக்கிடையிலான சந்தைகள் இயல்புநிலைக்குத் திரும்பும் சமிக்ஞைகளைக் காண்பித்துள்ளன.

சந்தைத் தொழிற்பாடுகள் அறிக்கை மத்திய வங்கியின் வலைத்தளத்தில் இலத்திரனியல் வடிவத்தில் கிடைக்கப்பெறுகின்றது: https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/market_operations_report_december_2025_t.pdf அத்துடன் சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் சந்தை இயக்கவாற்றல் நிழற்படம் தகவல் வரைபடமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது:

https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/market_operations_report_december_infographic_2025_t.pdf

# நாணயத் தொழிற்பாடுகள் மற்றும் சந்தை இயக்கவாற்றல்கள் என்பவற்றின் நிழற்படம்

## பணச் சந்தைப் போக்குகள்







பணச் சந்தையானது 2025 ஆண்டு முழுவதும் தொடர்ச்சியான மிகையொன்றினைத் தொடர்ந்தும் கொண்டிருந்தது...

...சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமானது 2025இன் இரண்டாம் அரையாண்டில் அதிகரித்துக் காணப்பட்ட போதிலும் 2026 சனவரியில் திரும்பலடைந்தது

## திரவத்தன்மைப் பகிர்ந்தளிப்பு

திரவத்தன்மைப் பகிர்ந்தளிப்பில் தொடர்ச்சியான சமச்சீரின்மையொன்று 2025இல் அவதானிக்கப்பட்டது

### உள்நாட்டு வங்கிகள்




உள்நாட்டு வங்கிகள் கலப்புத் திரவத்தன்மை நிலைமையொன்றினைக் காட்டின

### வெளிநாட்டு வங்கிகள்



முக்கிய வெளிநாட்டு வங்கிகள் பாரியளவிலான திரவத்தன்மைப் பங்கினைக் கொண்டிருந்தன

### தனியான முதனிலை வணிகர்கள்




தனியான முதனிலை வணிகர்களின் திரவத்தன்மையானது மேம்பட்டுக் காணப்பட்டது

## ஒதுக்குப் பணம் மற்றும் சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

2025 : ரூ. 1,796.5 பில் | வளர்ச்சி : 17% ஆண்டிற்காண்டு




ஒதுக்குப் பணமானது குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியடைந்தது

2024 : ரூ. 1,539.3 பில் | வளர்ச்சி : 16% ஆண்டிற்காண்டு

2025 : ரூ. 1,568.9 பில் | வளர்ச்சி : 15% ஆண்டிற்காண்டு

சுற்றோட்டத்திலுள்ள நாணயமானது அதிகரித்தது



2024 : ரூ. 1,358.7 பில் | வளர்ச்சி : 15% ஆண்டிற்காண்டு

## செலாவணி வீத அசைவுகள், வெளிநாட்டுச் செலாவணித் தலையீடுகள் மற்றும் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்

**ஐ.அ.டொலரொன்றிற்கான இலங்கை ரூபாவின் அசைவு**

ஆண்டு காலப்பகுதியில், இலங்கை ரூபாவானது ஐ.அ.டொலரிற்கெதிராக 5.6% இனால் பெறுமதித்தேய்வடைந்து காணப்பட்டது.




பெறுமதித் திகதியின் அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் தலையீடுகள் (ஐ.அ.டொலர்)

| | கொள்வனவுகள் | விற்பனைகள் |
|---|---|---|
| 2025இன் முதலாவது அரையாண்டு | 1.1 பில் | 0.06 பில் |
| 2025இன் இரண்டாவது அரையாண்டு | 1.0 பில் | 0.05 பில் |






மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2025இன் இறுதியளவில் **ஐ.அ.டொலர் 6.8 பில்லியனிற்கு** அதிகரித்தன (இது ஐ.அ.டொலர் 1.4 பில்லியன் தொகையிலான சீன மக்கள் வங்கியுடனான பரஸ்பர பரிமாற்றல் பெறுகைகளை உள்ளடக்கின்றது

மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் **நெருக்கடியிலிருந்தான உயர்ந்தளவிலான மட்டத்தினை** அடைவதற்கு **ஐ.அ.டொலர் 2 பில்லியன்** தொகையிலான தேறிய வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகள் துணைபுரிந்தன